# திரு. இராமசாமி நினைவுப்(SRM) பல்கலைக்கழகம்

## தமிழ்ப்பேராய விருதுகள், 2012

### புதுமைப்பித்தன் படைப்பிலக்கிய விருது

மண்ணின் மொழியையும் மனத்தின் மொழியையும் நாடித்துடிப்பெனக் கணக்கிட்டு அறிந்த கலைஞர் **தோப்பில் முகம்மது மீரான்**. நாஞ்சில் நாட்டில் வேர்கொண்ட அவர் படைப்புகளில், அவரைச் சூழ உள்ள எளிய மக்கள் அனுபவிக்கும் அத்தனை அவலங்களும் சிறுசிறு மகிழ்ச்சிகளும் கடினமான வாழ்நிலைகளும் உயிர் அசைவுகள் தோன்றச் சித்திரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். சற்றும் பொருள் பிசகாத அம்மக்களின் 'தூய' மொழியே அவர் எழுத்தில் பேசுகிறது. வெளிச்ச உலகத்துக்கு அவர் காட்டுகின்ற காட்சிகள் அன்பையும் இரக்கத்தையும் சுரக்கச் செய்பவை. அப்பழுக்கற்ற மனிதாபமானத்தைத் தம் எழுத்தில் இடைவிடாது மணக்கச் செய்யும் இவர் 5 நாவல்கள், 5 சிறுகதைத் தொகுதிகள், 6 மொழிபெயர்ப்பு நூல்கள் படைத்தவர். தமிழின் தனிச்சிறப்பான புனைகதைப் படைப்பாளிகளுள் ஒருவர். சாகித்திய அக்காதெமி விருது உட்படப் பல விருதுகள் பெற்றவர். இவரது **அஞ்சுவண்ணம் தெரு** என்னும் நாவல் திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராயத்தின் 2012ஆம் ஆண்டுக்கான **புதுமைப்பித்தன் படைப்பிலக்கிய விருதினை**ப் பெறுகிறது.

தைக்காப் பள்ளியும், இல்லாத மினாராக்களும், கேள்விகளுக்கு அப்பாற்பட்ட நம்பிக்கைகளும், ஜின்னுகளும், தொன்மங்களும் - இவற்றோடு கூட வரலாற்றுப் பாரம்பரியமுமுடைய எளிய அப்பாவி நெசவாளர்களும் வாழும் தெருதான் அஞ்சுவண்ணம் தெரு. தொன்மங்கள் வந்துவந்து நிகழ்ந்து போகும் அஞ்சுவண்ணம் தெருவுக்கு ஒரு நேர்மையான பார்வையாளராகவும் பதிப்பாளராகவும் கிடைத்தவர் தோப்பில். 'வெளிச்சம் நுழையாத அஞ்சுவண்ணம் தெரு' மக்களின் நம்பிக்கைகள், அச்சங்கள், துயரங்கள், ஆன்மீகத்தின் மிக எளிமையான வடிவுடைய அவர்களுடைய இஸ்லாம், சுயநல முரண்பாடுகள் இவற்றினிடையே தமது கலை நிரம்பிய பரிவை ஊடுருவச் செய்திருக்கிறார் தோப்பில். இப்படைப்புக்காக ரூ. 1,50,000 விருதுத்தொகையுடைய புதுமைப்பித்தன் படைப்பிலக்கிய விருதைத் தோப்பில் முகம்மது மீரான் அவர்களுக்கு வழங்கிப் பெருமை கொள்கிறது திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராயம்.

இடம் : காட்டாங்குளத்தூர் **(மு. பொன்னவைக்கோ)**

நாள் : 24.08.2012 துணைவேந்தர்,

தமிழ்ப்பேராயத் தலைவர்

# <u>திரு. இராமசாமி நினைவுப்(SRM) பல்கலைக்கழகம்</u>

## <u>தமிழ்ப்பேராய விருதுகள், 2012</u>

<u>ஜி. யு. போப் மொழிபெயர்ப்பு விருது</u>

சமகால உலகப் புனைகதை இலக்கியங்களிலிருந்த மிகத் தகுதியானவற்றைத் தெரிந்தெடுத்து அழகிய எளிய தமிழில் கலை நுட்பம் குன்றாமல் படைத்துவருபவர் **திரு.க.குப்புசாமி** ஆவார். இவர் படைத்துள்ள மொழிபெயர்ப்பு நூல்கள் மொத்தம் 9 ஆகும். பெரும் ஆர்வத்துடன் பிறநாட்டு நல்லறிஞர் நூல்களைத் தமிழில் வழங்கும்போது, தொன் மொழியாகிய தமிழ் இன்றைய மொழிபெயர்ப்புப் பணியில் எவ்வளவு கடுமையான அறைகூவலையும் புத்திளமையோடு எதிர்கொண்டு வெற்றி காணும் பேராளுமை படைத்ததாக விளங்குவதை உணர்ந்து பெருமைப்படுகிறவர் திரு. க. குப்புசாமி. இவருடைய தமிழ் மொழிபெயர்ப்பு ஆங்கில வடிவைவிட அழகும் எளிமையும் சுவையும் கொண்டு அமைந்திருப்பதாகப் பாராட்டப்படுகிறது. உலகப் புகழ்பெற்ற துருக்கி எழுத்தாளரும் நோபல் பரிசு பெற்றவருமான ஓரான் பாமுக்கின் 'My Name is Red' என்னும் நாவலை **என்பெயர் சிவப்பு** எனும் தலைப்பில் சிறப்பாக மொழிபெயர்த்துள்ளார். இந்நூல் திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராயத்தின் 2012ஆம் ஆண்டிற்கான **ஜி. யு. போப் மொழிபெயர்ப்பு விருதினைப்** பெறுகிறது.

ஓரான் பாமுக்கின் My Name is Red என்னும் நாவல் 16ஆம் நூற்றாண்டில் துருக்கியில் சிறப்புற்றிருந்த ஒட்டாமன் காலத்து நுண்ணோவியக் கலையுடன் மேலைநாட்டு ஓவியக்கலை வந்து பொருத முரண்களைச் சித்திரிப்பது. அம்முரண்களால் ஏற்பட்ட ஆன்மீகச் சிக்கலை அடித்தளமாகக் கொண்டது. நுண்ணோவியத்தின் காட்சிக்கோணம், எப்போதும் இறைவனுடையதாக இருக்கவேண்டுமென்னும் பொது விதி மேல்நாட்டு ஓவியக் கலப்பால் சிதைவுற்றது. கலைஞர்களுக்கிடையே நிகழும் சிக்கல்களின் வெப்பம் உயிர்த்துடிப்புடைய கலையாக நாவலில் விரவுகிறது. இந்நாவலை மொழிபெயர்த்தமைக்காகத் திரு. க. குப்புசாமி அவர்களுக்கு ரூ. 1,50,000 விருதுத்தொகையுடைய ஜி. யு. போப் மொழிபெயர்ப்பு விருதினை வழங்குவதில் திரு.இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராயம் பெருமை கொள்கிறது.

இடம் : காட்டாங்குளத்தூர் — **(மு. பொன்னவைக்கோ)**

நாள் : 24.08.2012 — துணைவேந்தர்,

தமிழ்ப்பேராயத் தலைவர்

# திரு. இராமசாமி நினைவுப்(SRM) பல்கலைக்கழகம்

## தமிழ்ப்பேராய விருதுகள், 2012

### பெ.நா. அப்புசாமி அறிவியல் தமிழ் விருது

**மருத்துவர் கோ. அன்பழகன்** எலும்பு முடநீக்கியல் துறை வல்லுநர். திரு.இராமசாமி நினைவுப் பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரியில் எலும்பு முடநீக்கியல் துறைப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். அரசு பொது மருத்துவ மனைகளிலும் மருத்துவக் கல்லூரிகளிலும் அறுவை சிகிச்சை வல்லுநராகவும் பேராசிரியராகவும் பணியாற்றியவர். அறிவியலை, குறிப்பாக மருத்துவ அறிவியலைத் தமிழில் வழங்குவதைக் குறிக்கோளாகக் கொண்ட இவர் 2 மருத்துவ அறிவியல் தமிழ் நூல்களையும் 6 கவிதை நூல்களையும் 4 பிற நூல்களையும் படைத்தவர். பள்ளி, கல்லூரி கல்விக் களங்களில் தமிழ்ப்பற்றும் தமிழ் ஆற்றலும் மிகுந்தவராகத் தமிழ் மன்றங்களை இயக்கிய சிறப்பும் தற்போது உலகத் தமிழ் எழுத்தாளர் சங்கம், உலகத் தமிழ்ப் பேரமைப்புப் போன்ற பல்வேறு தமிழ் அமைப்புகளில் பங்கு கொண்டு அறிவியல் தமிழுக்குத் தொண்டாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கவை. இவருடைய **வலிய எலும்பே வழுவழுப்பான மூட்டே** என்னும் மருத்துவத் தமிழ்நூல் திரு.இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராயத்தின் 2012ஆம் ஆண்டுக்கான **பெ. நா. அப்புசாமி அறிவியல் தமிழ் விருதினைப்** பெறுகிறது.

தம்முடைய மருத்துவ அறிவியல் நூல்களுக்காக இருமுறை தமிழக அரசின் விருதும் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக விருதும் பெற்ற இவர், இந்நூலில் ஆங்கிலக் கலைச் சொற்களுக்கு நிகராகப் புதிய தனித்தமிழ்ச் சொற்களைக் கண்டுணர்ந்து பயன்படுத்தியிருப்பது அறிவியல் தமிழ் நூல்களுக்கான வழிகாட்டலாக அமைந்திருப்பதெனப் பலரும் பாராட்டியுள்ளனர். பல்வேறு எலும்பு மூட்டுகள், அவற்றில் ஏற்படக்கூடிய நோய்கள், அவற்றைத் தவிர்ப்பதற்கான வழிவகைகள், நோய் வந்த பின் மேற்கொள்ளவேண்டிய சிகிச்சை முறைகள் ஆகியவற்றை எளிய இனிய தமிழில் விளக்கும் இந்நூலுக்காக மருத்துவர் கோ. அன்பழகன் அவர்களுக்கு ரூ.1,50,000 விருதுத்தொகையுடைய பெ. நா. அப்புசாமி அறிவியல் தமிழ் விருதினை வழங்குவதில் திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராயம் பெருமை கொள்கிறது.

இடம் : காட்டாங்குளத்தூர்

நாள் : 24.08.2012

(**மு. பொன்னவைக்கோ**)
துணைவேந்தர்,
தமிழ்ப்பேராயத் தலைவர்

# திரு. இராமசாமி நினைவுப்(SRM) பல்கலைக்கழகம்

## தமிழ்ப்பேராய விருதுகள், 2012

### ஆனந்தகுமாரசாமி கவின்கலை விருது

சென்னைக் கிறித்துவக் கல்லூரித் தமிழ்த் துறையில் இணைப் பேராசிரியராகவும் ஆய்வு மேம்பாட்டுத் துறையில் கலையியல் பிரிவு இணை முதன்மையராகவும் பணியாற்றி வரும் **முனைவர் சா. பாலுசாமி (பாரதிபுத்திரன்)** தமிழகச் சிற்ப, ஓவியக் கவின் கலைகளில் ஆழ்ந்த அறிவும் நுண்ணிய ஆய்வுப் பார்வையும் கொண்டவர். கவிஞர், கவிதை மொழிபெயர்ப்பாளர், மக்கள் பாடல்கள் பதிப்பாசிரியர், கலைக்கோட்பாட்டு ஆய்வாளர், மாமல்லபுரச் சிற்ப ஆய்வாளர் எனப் பன்முகத் திறனாளியான இவர் எல்லாவற்றிலும் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க சுவடுகளைப் பதித்திருப்பவர். இத்தகைய அறிஞரின் எட்டு நூல்களுள் ஒன்று **அர்ச்சுனன் தபசு** என்னும் சிற்ப ஆய்வு நூல். இந்நூல் திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராயத்தின் 2012ஆம் ஆண்டிற்கான **ஆனந்தகுமாரசாமி கவின்கலை விருதினைப்** பெறுகிறது.

உலகக் கலையியல் அறிஞர்கள் பலரையும் ஈர்க்கும் மாமல்லபுரத்து அருச்சுனன் தவச் சிற்பத்தை ஆதார உண்மைகளுடனும் அறிவியல் நோக்குடனும் ஆய்ந்து அறுதியான முடிவுகளை வந்தடையும் திறம்பட்ட நூல் இது. மகாபாரதத்தில் பாண்டவர்கள் கண்ட கங்கையை உள்ளிட்ட இமயக்காட்சியைப் பல்வேறு உயிரினங்கள், தாவரங்கள் ஆகியவற்றின் நுட்ப விவரங்களுடன் காட்டும் இச்சிற்பத் தொகுதி அருச்சுனன் தவத்தையே குறிக்கிறது என இந்நூல் உறுதி செய்கிறது. இத்துணைச் சிறப்புகள் உடைய சிற்பத் தொகுதியை உருவாக்கிய சிற்பக் கலைஞர்களின் கலையாளுமையும் அருமுயற்சியும் காலங்களை வென்றவை என்ற உண்மையை 'அர்ச்சுனன் தபசு' தெளிவாக்குகிறது. இந்நூலுக்காக முனைவர் சா. பாலுசாமி அவர்களுக்கு ரூ. 1,50,000 விருதுத்தொகையுடைய, ஆனந்தகுமாரசாமி கவின்கலை விருது வழங்குவதில் திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராயம் பெருமை கொள்கிறது.

இடம் : காட்டாங்குளத்தூர்
நாள் : 24.08.2012

(**மு. பொன்னவைக்கோ**)
துணைவேந்தர்,
தமிழ்ப்பேராயத் தலைவர்

# திரு. இராமசாமி நினைவுப்(SRM) பல்கலைக்கழகம்

## தமிழ்ப்பேராய விருதுகள், 2012

### முத்துத்தாண்டவர் தமிழிசை விருது

**திரு.ந. மம்மது** தமிழிசையில் இயங்கிவரும் ஆய்வாளர். சமயம், தத்துவம், சூஃபி இசை ஆகியவற்றில் உயர்கல்வி பெற்ற இவர் இசைஞாயிறு வீ.பா.கா. சுந்தரம் அவர்களின் மாணவராகத் தமிழிசை ஆய்வைப் பயின்றவர். கடந்த 40 ஆண்டுகளாகத் தமிழிசை, தமிழர் நாட்டியம், தமிழர் கூத்து ஆகிய தமிழ்க்கலைத் துறைகளில் ஆழ்ந்த ஈடுபாட்டுடன் அரிய ஆய்வுகள் செய்துவருபவர். இந்தியப் பல்கலைக் கழகங்களிலும் அமெரிக்கத் தமிழ்ச் சங்கங்கள் பலவற்றிலும் ஆய்வுரைகளுடன் இசை நிகழ்த்திக் காட்டலையும் செய்திருக்கிறார். தமிழகத்திலும் அயலகத்திலும் தமிழிசை பற்றிய 100-க்கும் மேற்பட்ட கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். தமிழிசை குறித்த ஆறு ஆய்வு நூல்கள் படைத்துள்ளார். தொடர்ந்து 300 தமிழ்ப் பண்கள் பற்றிய ஆய்வு நூலையும் அப்பண்களைப் பதிவு செய்த குறுந்தகட்டையும் உருவாக்கும் அருமுயற்சியில் ஈடுபட்டுவருகிறார். இவர் உருவாக்கிய **தமிழிசைப் பேரகராதி** திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராயத்தின் 2012ஆம் ஆண்டுக்கான **முத்துத்தாண்டவர் தமிழிசை விருதினைப்** பெறுகிறது.

இந்நூல் 3000 ஆண்டுத் தொன்மையுடைய தமிழிசைக்கு முதன்முதலாக உருவாக்கப்பட்ட அகராதியாகும். 5000 தனித்தமிழ் இசைக் கலைச்சொற்களைக் கொண்ட களஞ்சியமாகத் திகழ்வது இவ்வகராதி. மறக்கப்பட்டு வரும் தமிழிசைச் செல்வத்தை மீட்டெடுத்து அதனைத் தமிழ்ப்பண்பாட்டின் சிறந்த கூறாக உலகிற்கு அறிமுகப்படுத்துவதற்கு அடிப்படையான அருநூல் இது. அறிவுக் கூர்மையும் ஆய்வு நுட்பமும் அயரா உழைப்பும் அருந்தமிழ்ப் பற்றும் இணைந்து படைக்கப்பட்ட இந்நூலுக்காகத் திரு. மம்மது அவர்களுக்கு ரூ.1,50,000 விருதுத்தொகையுடைய முத்துத்தாண்டவர் தமிழிசை விருதினை வழங்குவதில் திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராயம் பெருமைப்படுகிறது.

இடம் : காட்டாங்குளத்தூர் (**மு. பொன்னவைக்கோ**)

நாள் : 24.08.2012

துணைவேந்தர்,

தமிழ்ப்பேராயத் தலைவர்

# திரு. இராமசாமி நினைவுப்(SRM) பல்கலைக்கழகம்

## தமிழ்ப்பேராய விருதுகள், 2012

### வளர்தமிழ் விருது

திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழக அறிவியல் மற்றும் கலையியல் புலத் தமிழ்த் துறையில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றி வரும் **முனைவர் க.சுந்தரபாண்டியன்** தமிழ்ப் பொருளிலக்கண ஆராய்ச்சியில் ஆழ்ந்த ஈடுபாடும் பயிற்சியும் உடையவர். பல்வேறு இலக்கண இலக்கிய ஆய்வுக் கருத்தரங்குகளில் பங்குகொண்டு தரமான ஆய்வுரைகள் வழங்கியுள்ளவர். பள்ளிப் பருவத்திலிருந்தே மேடைப்பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகள் பலவற்றில் கலந்துகொண்டு பரிசுகளும் விருதுகளும் பெற்றவர். ஆசிரியப் பணியில் தமக்கென ஒரு தனித்திறனுடன் சிறப்பிடம் பெற்றுத் திகழ்பவர். இவருடைய **தமிழில் பொருளிலக்கண வளர்ச்சி** என்னும் ஆய்வு நூல் திரு.இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராயத்தின் 2012ஆம் ஆண்டிற்கான **வளர்தமிழ் விருதினைப்** பெறுகிறது.

இளம் ஆய்வாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் தமிழ்ப்பேராயம் வழங்குவது வளர்தமிழ் விருது. முனைவர் க. சுந்தரபாண்டியனின் பொருளிலக்கண ஆய்வு இவ்விருதுக்கு முற்றிலும் தகுதியானதாகும். தொல்காப்பியம் தொடங்கி 'அறுவகை இலக்கணம்' ஈறாக 2500 ஆண்டுக் கால இடைவெளியில் தோன்றிய 15 பொருளிலக்கண நூல்களை நுட்பமாக ஆராய்ந்து பல்வேறு காலப்பகுதிகளின் இலக்கியங்களை ஒப்புநோக்கி ஓர் ஆய்வுக் களஞ்சியமாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. காலந்தோறும் பொருளிலக்கணத்தில் நிகழ்ந்து வந்த மாற்றங்கள், வளர்ச்சிகள் எப்போதும் மாறாமலிருக்கும் அடிப்படை மரபுகள் ஆகியவற்றை எடுத்தளிக்கும் இந்நூல் அயராத உழைப்பிலும் உண்மை கண்டறியும் தேடலிலும் விளைந்ததாகும். இந்நூலுக்காக, முனைவர் க. சுந்தரபாண்டியன் அவர்களுக்கு ரூ. 1,50,000 விருதுத்தொகையுடைய வளர்தமிழ் விருது வழங்குவதில் திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராயம் பெருமை கொள்கிறது.

இடம் : காட்டாங்குளத்தூர்
நாள் : 24.08.2012

(**மு. பொன்னவைக்கோ**)
துணைவேந்தர்,
தமிழ்ப்பேராயத் தலைவர்

# திரு. இராமசாமி நினைவுப்(SRM) பல்கலைக்கழகம்

## தமிழ்ப்பேராய விருதுகள், 2012

### பரிதிமாற் கலைஞர் விருது

**முனைவர் செ.வை. சண்முகம்** தமிழ்ப் பேரறிஞர்களுள் சிறப்பிடம் பெற்றவர். தமிழ் இலக்கணத்திலும் மொழியியலிலும் கவிதை இயலிலும் ஆழ்ந்த புலமை உடையவர். தொல்காப்பிய இலக்கணத்தை, அதில் உள்ளடங்கி உள்ள கோட்பாடுகளை அடையாளம் கண்டு பிறமொழியாளரும் அதனை மதிப்பீடு செய்யும் வகையில் ஆய்வு நூல்கள் படைத்தவர். உலக மொழியியல் வரலாற்றில் தொல்காப்பியம் சிறப்பிடம் பெறும் வகையில் அவர் செய்துள்ள ஆய்வு தமிழின் பெருமையை நிலைநிறுத்துவதாகும். தொல்காப்பியம் மட்டுமன்றிப் பிற இலக்கணங்கள் குறித்தும் மலையாள இலக்கணம் குறித்தும் மொழியியல் குறித்தும் இலக்கியத் திறனாய்வு குறித்தும் இவர் இயற்றிய 29 நூல்களும் 200-க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும் தமிழுக்கு அவர் செய்த சிறந்த சேவையாகக் கருதத்தக்கவை. ஐந்து நூல்களும் கட்டுரைகள் சிலவும் ஆங்கிலத்தில் அமைந்தவை. மொழியியலையும் கவிதை இயலையும் இணைத்து இவர் செய்துள்ள ஆய்வும் எழுத்துச் சீர்த்திருத்தம் குறித்த முற்போக்கான ஆய்வும் அறிவியல் தமிழ் ஆய்வும் இவரது ஆய்வுகளுள் குறிப்பிடத்தக்கவை.

அண்ணாமலைப் பல்கலைக்கழக மொழியியல் உயராய்வு மைய இயக்குநராகவும் பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் வருகைதரு பேராசிரியராகவும் பயனுள்ள பணிகள் ஆற்றிய இவருக்குத் தமிழக அரசு உட்படப் பல விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய பேரறிஞருக்கு மதிப்புறு தகைஞருக்கான(Fellowship award) ரூ. 2,00,000 விருதுத்தொகையுடைய, 2012ஆம் ஆண்டிற்கான **பரிதிமாற் கலைஞர் விருதினை** வழங்கிப் பெருமை கொள்கிறது திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராயம்.

இடம் : காட்டாங்குளத்தூர்

நாள் : 24.08.2012

(மு. **பொன்னவைக்கோ**)
துணைவேந்தர்,
தமிழ்ப்பேராயத் தலைவர்

# திரு. இராமசாமி நினைவுப்(SRM) பல்கலைக்கழகம்

## தமிழ்ப்பேராய விருதுகள், 2012

### பாரிவேந்தர் பைந்தமிழ் விருது

**பெரும்புலவர்**, **முதுமுனைவர் இரா**. **இளங்குமரனார்** அவர்கள் மிகச் சிறந்த தமிழ் மூதறிஞர் ஆவார். தொல்காப்பியம் முதலிய பழந்தமிழ் இலக்கணங்கள் குறித்த ஆய்வு நூல்கள், சொல்லாராய்ச்சி நூல்கள், அகராதிகள் சொற்களஞ்சியத் தொகுப்புகள் இலக்கிய ஆய்வுகள், பதிப்புகள் என 400-க்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்துத் தமிழுக்குப் பெருந்தொண்டு ஆற்றியுள்ளார். 82 அகவை முதிர்விலும் இவரது ஆழ்ந்த அறிவு முதிர்வு தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. திருச்சிக்கு அருகில் திருவள்ளுவர் தவச்சாலை அமைத்துப் பல்வேறு தமிழ் இலக்கண, இலக்கிய, பண்பாட்டுப் பணிகளில் முனைந்து ஈடுபட்டு வருகிறார். திருக்குறள் தொடர்பான இவருடைய ஆய்வு நூல்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 70 ஆகும். தனித்தமிழ் போற்றும் தகைமையாளராகிய இளங்குமரனார் பாவாணர் படைப்புகள் அனைத்தையும் அழகிய தொகுப்புகளாக்கிப் பதிப்பித்துள்ளார். பல்வேறு இலக்கிய இதழ்களில் இவருடைய கட்டுரைகள் பல வெளிவந்துள்ளன. ஆய்வரங்குகள் பலவற்றில் ஆய்வுரைகள் நிகழ்த்தியுள்ளார்.

தமிழறிஞராக ஆய்வு, படைப்பு என்பவற்றோடு தமிழ்மொழி, பண்பாட்டுக் காப்பாளராக அவற்றுக்கான போராட்டங்களில் முன்னின்ற தமிழ் மறவராகவும் இவர் திகழ்கிறார். பாரதிதாசன் பல்கலைக்கழகத்தால் முதுமுனைவர் பட்டமும், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தால் தமிழ்ப் பேராளர் என்னும் விருதும், அமெரிக்க அமைப்பினால் வாழ்நாள் சாதனையாளர் விருதும் வழங்கப்பெற்றவர் இவர். இவருடைய புலமை, படைப்பாளுமை, முனைப்பான தமிழுணர்வு போன்ற அனைத்து வாழ்நாள் சாதனைகளையும் போற்றிச் சிறப்பிக்கும் வகையில் இவருக்குத் திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராயம் ரூபாய் 5,00,000 மதிப்புடைய 2012ஆம் ஆண்டிற்கான **பாரிவேந்தர் பைந்தமிழ் விருதினை** வழங்கிப் பெருமை கொள்கிறது.

இடம் : காட்டாங்குளத்தூர்

நாள் : 24.08.2012

(**மு**. **பொன்னவைக்கோ**)

துணைவேந்தர்,

தமிழ்ப்பேராயத் தலைவர்

# திரு. இராமசாமி நினைவுப்(SRM) பல்கலைக்கழகம்

காட்டாங்குளத்தூர் - 603203

## தமிழ்ப்பேராய விருதுகள் - 2012

செய்தி அறிக்கை

திரு. இராமசாமி நினைவுப்(SRM) பல்கலைக்கழகம், தமிழ்ப்பேராயம் என்னும் ஓர் அமைப்பினை நிறுவித் தமிழ் மொழி, இலக்கியம், கலை, ஆராய்ச்சி ஆகியவற்றின் வளர்ச்சிக்கான பல திட்டங்களைச் செயல்படுத்திவருகிறது. இணையவழியிலான தமிழ் உயர்கல்வி, தமிழ்ச்சமயக்கல்வி, கணினித் தமிழ்க் கல்வி, அரிய நூல்கள் பதிப்புப் பணி, ஆகியவற்றுடன், தமிழ்ப் படைப்பாளிகள், திறனாய்வாளர்கள், சாதனைகள் புரிந்த பேரறிஞர்கள் ஆகியோர்க்கு 19 இலட்சம் பெறுமான 10 வகை விருதுகளை வழங்கும் அரிய திட்டத்தையும் 2012 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்துகிறது.

தமிழ்ப்பேராய விருதுகள் கீழ்க்காணும் பத்துத் தலைப்புகளில் வழங்கப்படுவதற்குரியன.

1. புதுமைப்பித்தன் படைப்பிலக்கிய விருது — ரூ.1,50,000/
   (சிறுகதை, நாவல், நாடகம்)

2. பாரதியார் கவிதை விருது — ரூ.1,50,000/
   (கவிதை)

3. அழ. வள்ளியப்பா குழந்தை இலக்கிய விருது — ரூ.1,50,000/
   (குழந்தை இலக்கியம்)

4. ஜி. யு. போப் மொழிபெயர்ப்பு விருது — ரூ.1,50,000/
   (மொழிபெயர்ப்பு)

5. பெ.நா. அப்புசாமி அறிவியல் தமிழ் விருது — ரூ.1,50,000/
   (அறிவியல் தமிழ்)

6. ஆனந்தகுமாரசாமி கவின்கலை விருது — ரூ.1,50,000/
   (கவின்கலை)

7. முத்துத்தாண்டவர் தமிழிசை விருது — ரூ.1,50,000/
   (தமிழிசை)

8. வளர்தமிழ் விருது — ரூ.1,50,000/
(இளம் ஆய்வறிஞர்)

9. பரிதிமாற் கலைஞர் விருது — ரூ.2,00,000/
(சிறந்த தமிழறிஞர், மதிப்புறு தகைஞர்)

10. பாரிவேந்தர் பைந்தமிழ் விருது — ரூ.5,00,000/
(தமிழ்ப்பேரறிஞர், வாழ்நாள் சாதனையாளர்)

இவ்வாண்டு பாரதியார் கவிதை விருது, அழ. வள்ளியப்பா குழந்தை இலக்கிய விருது ஆகியவற்றுக்காகப் பரிந்துரைக்கப்பட்ட நூல்களுள் எந்த நூலும் விருதுக்குத் தகுதியுடையதாக நடுவர்களால் ஏற்கப் பெறாமையால் அவ்விரு விருதுகள் மட்டும் வழங்கப்பெறவில்லை.

**<u>பரிந்துரைக்கப்பட்ட நூல்கள்</u>**

1. புதுமைப்பித்தன் படைப்பிலக்கிய விருதுக்காக : **83** நூல்கள்
2. பாரதியார் கவிதை விருதுக்காக : **100**..நூல்கள்
3. அழ. வள்ளியப்பா குழந்தை இலக்கிய விருதுக்காக : **42** நூல்கள்
4. ஜி. யு. போப் மொழிபெயர்ப்பு விருதுக்காக : **36** நூல்கள்
5. பெ.நா. அப்புசாமி அறிவியல் தமிழ் விருதுக்காக : **44** நூல்கள்
6. ஆனந்தகுமாரசாமி கவின்கலை விருதுக்காக : **8** நூல்கள்
7. முத்துத்தாண்டவர் தமிழிசை விருதுக்காக : **14** நூல்கள்
8. வளர்தமிழ் விருதுக்காக : **20** நூல்கள்
9. பரிதிமாற் கலைஞர் விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்ட அறிஞர்கள் : **38** பேர்
10. பாரிவேந்தர் பைந்தமிழ் விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்ட அறிஞர்கள் : **42** பேர்

**தெரிவு முறை** :

இந்நூல்களிலிருந்து விருதுகளுக்குரிய நூல்களையும் அறிஞர்களையும் தெரிவு செய்வதற்கான தெரிவு முறை பேராய விதிமுறைகளின்படி மூன்றடுக்காக அமைந்தது.

1. படைப்பாளிகளும் தமிழறிஞர்களுமான ஆய்வுக்குழுவினர் அடிப்படைத் தெரிவில் சில நூல்களைத் தேர்ந்தெடுத்தனர்.

2. அந்நூல்களுள் முதல் எட்டு விருதுகளுக்கான நூல்கள் அவ்வவ் துறை வல்லுநர்களான 2 பேர் கொண்ட ஆய்வுக் குழுவுக்கு அனுப்பப்பட்டு அவர்களது தெரிவு பெறப்பட்டது.

3. இறுதியாக ஆய்வுக் குழுவினர் தெரிவு செய்த நூல்களும் அடிப்படைத் தெரிவில் தெரிவு செய்யப்பட்ட 9,10ஆம் விருதுப்பிரிவிற்கான அறிஞர் பெயர்களும் தகுதிவாய்ந்த படைப்பாளிகளும் தமிழிறிஞர்களுமான ஐவர் கொண்ட இறுதிநிலை நடுவர் குழுவினால் ஆய்வு செய்யப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன.

இம்முடிவுகள் பேராய விதிமுறைகளின்படி நடுவர்குழு \ விருதுக்குழுவின் கூட்டத்தில் இறுதி செய்யப்பட்டன. பின்னர்ப் பேராயச் செயற்குழுவின் கூட்டத்தில் அறிவிக்கப்பெற்று ஒப்புதல் பெறப்பட்டது.

விருது பெறும் படைப்பாளிகள், அறிஞர்கள் பெயர்கள் விழா மேடையில் அறிவிக்கப்படும். உரிய விருதுத்தொகை, பாராட்டுப் பட்டயம் வழங்கி அவர்கள் சிறப்பிக்கப்படுவார்கள்.

தலைவர்
தமிழ்ப்பேராயம்

முனைவர் **மு. பொன்னவைக்கோ**
துணைவேந்தர் **நாள்**: 17.08.2012

ஐயா, வணக்கம்.

**பொருள்**: தமிழ்ப்பேராயம் விருதுகள் வழங்கும் விழா - 24.8.2012.
மாணவர்களையும் ஆசிரியர்களையும் விழாவில் கலந்துகொள்ள
அனுப்பிவைத்தல் தொடர்பாக.

----

தமிழ்ப்பேராய விருதுகள் வழங்கும் விழா 24.8.2012 அன்று பல்கலைக்கழக வேந்தர் விருதளிக்கும் பெருநிகழ்வாக அமைய உள்ளது. T.P. கணேசன் அரங்கில் காலை 11 மணி முதல் 1.30 வரை நிகழவிருக்கும் இவ்விழாவில் தங்கள் புலத்தைச் சார்ந்த மாணவர்களையும் ஆசிரியர்களையும் கலந்துகொள்ள அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறேன்.

(**மு. பொன்னவைக்கோ**)
துணைவேந்தர்

**பெறுநர்**
இரா. பாலசுப்பிரமணியன்
இயக்குநர்,
அறிவியல் மற்றும் கலையியல் புலம்,
திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகம்.

முனைவர் **மு. பொன்னவைக்கோ**
துணைவேந்தர் **நாள்**: 17.08.2012

ஐயா, வணக்கம்.

**பொருள்**: தமிழ்ப்பேராயம் விருதுகள் வழங்கும் விழா - 24.8.2012.
மாணவர்களையும் ஆசிரியர்களையும் விழாவில் கலந்துகொள்ள
அனுப்பிவைத்தல் தொடர்பாக.

----

தமிழ்ப்பேராய விருதுகள் வழங்கும் விழா 24.8.2012 அன்று பல்கலைக்கழக வேந்தர் விருதளிக்கும் பெருநிகழ்வாக அமைய உள்ளது. T.P. கணேசன் அரங்கில் காலை 11 மணி முதல் 1.30 வரை நிகழவிருக்கும் இவ்விழாவில் தங்கள் கல்லூரியின் தமிழ் மன்ற உறுப்பினர்களான மாணவர்கள் அனைவரையும், தமிழ்த்துறைப் பேராசிரியர்களையும் கலந்துகொள்ள அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறேன்.

(**மு. பொன்னவைக்கோ**)
துணைவேந்தர்

**பெறுநர்**

முதல்வர்
S.R.M. கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
S.R.M. பல்கலைக்கழகம்,
காட்டாங்குளத்தூர்.

முனைவர் **மு. பொன்னவைக்கோ**
துணைவேந்தர் **நாள்**: 17.08.2012

<u>சுற்றறிக்கை</u>

நமது திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பேராய விருதுகள் வழங்கும் விழா 24.8.2012 அன்று காலை 11 மணிக்கு T.P. கணேசன் அரங்கில் சிறப்பாக நடைபெற உள்ளது. நீதியரசர் அரு. இலட்சுமணன் அவர்கள் தலைமையில் பல்கலைக்கழக வேந்தர் அவர்கள் தமிழ்ப் படைப்பாளிகளுக்கும் அறிஞர்களுக்கும் விருதுகள் வழங்கிப் பேருரை ஆற்றுவார்கள். வேந்தர் அவர்களின் பிறந்தநாளில் நிகழவிருக்கும் இச்சிறந்த விழாவுக்குப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள் ஆகிய அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(**மு. பொன்னவைக்கோ**)
துணைவேந்தர்
தமிழ்ப்பேராயத் தலைவர்

முனைவர் **பீ.மு. அபிபுல்லா**
செயலர்

**நாள்**: 17.08.2012

ஐயா, வணக்கம்.

**பொருள்**: தமிழ்ப்பேராயம் விருதுகள் வழங்கும் விழா - 24.8.2012.
மாணவர்களையும் ஆசிரியர்களையும் விழாவில் கலந்துகொள்ள அனுப்பிவைத்தல் தொடர்பாக.

----

தமிழ்ப்பேராய விருதுகள் வழங்கும் விழா 24.8.2012 அன்று பல்கலைக்கழக வேந்தர் விருதளிக்கும் பெருநிகழ்வாக அமைய உள்ளது. T.P. கணேசன் அரங்கில் காலை 11 மணி முதல் 1.30 வரை நிகழவிருக்கும் இவ்விழாவில் தங்கள் புலத்தைச் சார்ந்த மாணவர்களையும் ஆசிரியர்களையும் கலந்துகொள்ள அனுப்பிவைக்குமாறு துணைவேந்தர் விருப்பத்தின் வழியே தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(**பீ.மு. அபிபுல்லா**)
செயலர்,
தமிழ்ப்பேராயம்

**பெறுநர்**

இயக்குநர்
ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி,
திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகம்.

முனைவர் **பீ.மு. அபிபுல்லா**
செயலர்

**நாள்**: 17.08.2012

**பெறுநர்**

நீதியரசர் **அரு. இலட்சுமணன்** அவர்கள்,
11, Dev Regency,
முதலாவது முதன்மைச்சாலை,
காந்திநகர்,
அடையாறு,
சென்னை - 20

மாண்பமை ஐயா, வணக்கம்.

தங்கள் தலைமையில் 24.8.2012 அன்று திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகப் பேரரங்கில் நிகழவிருக்கும் தமிழ்ப்பேராய விருதுகள் வழங்கும் விழாவுக்குரிய அழைப்பிதழ் தங்களுக்கு நேற்று அனுப்பிவைக்கப்பெற்றது. 'தமிழ்ப்பேராய அமைப்பும் செயல்பாடுகளும்' என்னும் குறுநூலும், விழாத் தொடர்பான பத்திரிகைக் குறிப்பும் தங்கள் பார்வைக்காக இத்துடன் இணைத்தனுப்பப்படுகின்றன. நன்றி.

(**பீ.மு. அபிபுல்லா**)
செயலர்,
தமிழ்ப்பேராயம்

முனைவர் **பீ.மு. அபிபுல்லா**
செயலர்

**நாள்**: 17.08.2012

**பெறுநர்**

நீதியரசர் **அரு. இலட்சுமணன்** அவர்கள்,
11, Dev Regency,
முதலாவது முதன்மைச்சாலை,
காந்திநகர்,
அடையாறு,
சென்னை - 20

மாண்பமை ஐயா, வணக்கம்.

தங்கள் தலைமையில் 24.8.2012 அன்று திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகப் பேரரங்கில் நிகழவிருக்கும் தமிழ்ப்பேராய விருதுகள் வழங்கும் விழாவுக்குரிய அழைப்பிதழ் தங்களுக்கு நேற்று அனுப்பிவைக்கப்பெற்றது. 'தமிழ்ப்பேராய அமைப்பும் செயல்பாடுகளும்' என்னும் குறுநூலும், விழாத் தொடர்பான பத்திரிகைக் குறிப்பும் தங்கள் பார்வைக்காக இத்துடன் இணைத்தனுப்பப்படுகின்றன. நன்றி.

(**பீ.மு. அபிபுல்லா**)
செயலர்,
தமிழ்ப்பேராயம்

முனைவர் **பீ.மு. அபிபுல்லா** **நாள்**: 17.08.2012
செயலர்

அன்புடையீர், வணக்கம்.

**பொருள்** : SRM பல்கலைக்கழகம் - தமிழ்ப்பேராயம் - விருதுகள் வழங்கும் விழா - 24.8.2012 - தேநீர், மதிய உணவு ஏற்பாடுகள் - தொடர்பாக.

------

நமது பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராய விருதுகள் வழங்கும் விழா பல்கலைக்கழக வேந்தரின் பிறந்த நாளாகிய 24.8.2012 அன்று காலை 11 மணிக்கு T.P. கணேசன் அரங்கில் நிகழவிருக்கிறது. விழாத் தொடங்குவதற்கு முன்னர் 50 பேருக்குத் தேநீர், பிஸ்கட் சிற்றுண்டியும், மதியம் 1 மணிக்கு 100 பேருக்கு மதிய உணவும் (Veg) வழங்கப்படவேண்டியுள்ளது. இதற்குத் தாங்கள் ஆவன செய்யுமாறு துணைவேந்தர் விருப்பத்தின்படி கேட்டுக்கொள்கிறேன்.

(**பீ.மு. அபிபுல்லா**)
செயலர்,
தமிழ்ப்பேராயம்

**பெறுநர்**

இயக்குநர்
உணவக மேலாண்மை,
திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகம்,
காட்டாங்குளத்தூர் - 603203

திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகத் தமிழ்ப்பேராயத்தின் ஒரு சிறந்த திட்டம், பத்துத் தலைப்புகளில் தமிழ்ப் படைப்பாளிகளுக்கும் தமிழ்ப் பேரறிஞர்களுக்கும் 19 இலட்சம் பெறுமான விருதுகள் வழங்குவதாகும். இத்திட்டத்தின் முதலாண்டு விழா 24.8.2012 அன்று வேந்தர் பிறந்த நாள் நிகழ்ச்சிகளோடு இணைத்துத் தி.பொ. கணேசன் அரங்கில் நடத்தப்பட்டது. விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் துணைவேந்தர் அவர்கள் வரவேற்றுத் தமிழ்ப் பேராயத்தின் திட்டங்களையும் செயல்பாடுகளையும் விருதுகளின் நடுநிலைமையான தேர்வு முறைகளையும் விளக்கிப் பேசினார். விழாவுக்கு முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசர் அரு. இலட்சுமணன் அவர்கள் தலைமை ஏற்று, தமிழ்ப் பேராயத்தின் திட்டங்களைப் பாராட்டி உரை நிகழ்த்தினார்.

வேந்தர் அவர்கள் பேராய விருதுகள் பெற்ற அறிஞர்கள் எட்டுப் பேருக்கும் விருதுகள் வழங்கி விருதுப் பேருரை நிகழ்த்தினார். தொல்காப்பியப் பள்ளியை நிறுவுவதற்காகக் கூடிய தமிழறிஞர் கூட்டத்தில் தாமே கலந்துகொண்டு சாகித்திய அகாதமியை விட அதிகமான தொகையை வழங்கும் விருதுத் திட்டத்தை அறிவித்துத் தமிழ்ப்பேராயம் என்னும் பெரும் அமைப்பைத் தோற்றுவித்ததை நினைவு கூர்ந்தார். இன்னும் வரும் காலங்களில் தமிழுக்கும் தமிழ் இலக்கியத்திற்கும் மேலும் அதிக அளவில் ஆக்கமுறையிலான தொண்டுகளைச் செய்ய இருப்பதைத் தெரிவித்து அவையினரின் ஒட்டுமொத்த வரவேற்பையும் பாராட்டுதல்களையும் பெற்றார். யாருடைய தலையீடும் இன்றிப் பேராய விருதுகள் நேர்மையான, வெளிப்படையான தெரிவின் மூலம் வழங்கப்பட்டிருப்பதைப் பெருமையுடன் சுட்டிக்காட்டினார். அவருடைய தமிழ் உணர்வு பேராயத்தின் அடுத்தடுத்த வளர்ச்சிகளுக்கு உறுதுணையாக அமையும் என்பதை அவர் ஊக்க உரை உணர்த்தியது. SRM கல்விக்குழுமத் தலைவர் திரு. இரவிபச்சமுத்து அவர்கள் சிறப்புரை நிகழ்த்தினார். பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் ந. சேதுராமன் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

விழாவின் தொடக்கத்தில் நடனக் கலையரசி நர்த்தகி நடராஜ் அவர்கள் 'தமிழமுது' என்னும் பொருள் அமைந்த நாட்டிய நிகழ்ச்சி ஒன்றை நடத்தி நிறைந்த அரங்கின் பாராட்டுதல்களைப் பெற்றார்.

புதுச்சேரிப் பல்கலைக்கழக நாடகத்துறைப் பேராசிரியர் வேலுசரவணன் அவர்கள் 'கடல் பூதம்' என்னும் நாடகத்தை நிகழ்த்தி மாணவர்களையும் பார்வையாளர்களையும் நாடகத்தோடு ஒன்றச் செய்தார். விழா இறுதியில் தமிழ்ப் பேராயச் செயலர் முனைவர் பீ.மு. அபிபுல்லா அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

# விருது பெற்றவர்கள் விவரம்

| வ. எண் | விருது பெயர் | விருதாளர் பெயர் | விருதுக்குரிய நூல் பெயர் | விருதுத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1. | புதுமைப்பித்தன் படைப்பிலக்கிய விருது | திரு. தோப்பில் முகம்மது மீரான் | அஞ்சு வண்ணம் தெரு | 1,50,000/ |
| 2. | ஜி. யு. போப் மொழிபெயர்ப்பு விருது | திரு. க. குப்புசாமி | என் பெயர் சிவப்பு | 1,50,000/ |
| 3. | பெ.நா. அப்புசாமி அறிவியல் தமிழ் விருது | மருத்துவர் கோ. அன்பழகன் | வலிய எலும்பே வழுவழுப்பான மூட்டே | 1,50,000/ |
| 4. | ஆனந்தகுமாரசாமி கவின்கலை விருது | முனைவர் சா. பாலுசாமி | அர்ச்சுனன் தபசு | 1,50,000/ |
| 5. | முத்துத்தாண்டவர் தமிழிசை விருது | திரு. நா. மம்மது | தமிழிசைப் பேரகராதி | 1,50,000/ |
| 6. | வளர்தமிழ் விருது | முனைவர் க.சுந்தரபாண்டியன் | தமிழில் பொருளிலக்கண வளர்ச்சி | 1,50,000/ |
| 7. | பரிதிமாற் கலைஞர் விருது | முனைவர் செ.வை. சண்முகம் | ----- | 2,00,000/ |
| 8. | பாரிவேந்தர் பைந்தமிழ் விருது | முதுமுனைவர் இரா. இளங்குமரனார் | ----- | 5,00,000/ |